[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [*2020 செப்டம்பர் 15*

பொருளாதாரம் நலிவுற்றிருக்கும்பொழுது, அரசு செலவு செய்தாலொழிய, வேறு யாராலும் செலவு செய்து பொருளாதாரத்தை மீண்டெழச் செய்ய இயலாது. ஆகவே, தொடர்ந்து மக்கள் நலச் செலவினங்களைச் செயல்படுத்துவதில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உறுதியுடன் உள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள், அமைச்சர் பெருமக்களின் அறிவிப்புகள், விதி 110–ன்கீழ் சட்டசபையில் அறிவிக்கப்பட்ட திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு செயல்படுத்தும்.

மேற்கூறிய காரணங்களால், 2020–2021 ஆம் ஆண்டிற்கு திருத்திய வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு தாக்கல் செய்ய வேண்டும் என்று முன்வைக்கும் கோரிக்கை அவசியமில்லாதது என்பது தெளிவாகத் தெரிய வருகின்றது என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்து அமைகிறேன்.

பிற்பகல் 1–20

3. தகவல் கோரல்—தொடர்ச்சி

(உ) வெளியேற்றப்பட்ட இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் மீண்டும் பேரவை நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளுதல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. துரைமுருகன் அவர்கள்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் தங்களுடைய தீர்ப்புதான் இறுதியானது என்பதை நான் பலமுறை ஒத்துக்கொண்டிருக்கிறேன், சொல்லிக்கொண்டிருக்கிறேன். இன்றைக்குக்கூட காங்கிரஸ் நண்பர்கள் தங்கள் மேசையின் அருகில் வந்து நின்றதும், தாங்கள் ஒரு நடவடிக்கை எடுத்து இன்றைக்கு சபையிலிருந்து அவர்களை வெளியேற்றிவிட்டீர்கள். அந்தத் தீர்ப்பிலே நான் குறுக்கிட விரும்பவில்லை. ஆனால், அந்த உத்தரவு இன்றைக்கு மட்டும் பொருந்தும் என்று தாங்கள் அறிவித்தால் நாளைக்கு அவர்கள் சபையில் கலந்துகொள்வதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும். இருப்பதே நாளைக்கு ஒருநாள் என்பதால் அருள்கூர்ந்து மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அதற்கு அனுமதி தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

2020 செப்டம்பர் 15]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையிலிருந்து நீக்கியது இன்றைக்கு மட்டும்தான். நாளைக்கு வந்து அவர்கள் கலந்துகொள்ளலாம்.

திரு. துரைமுருகன்: *சரியான தீர்ப்பு.*

4. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

தமிழகத்தில் கொரோனா நோய்த் தொற்றைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொரோனா நோய் குறித்த பல்வேறு விளக்கங்களை, தகவல்களைக் கேட்டிருக்கின்றார். இன்றைக்கு தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவில் மட்டுமல்ல, உலகம் முழுக்க உள்ள 210 நாடுகளுக்கும் மேலாக, இன்னும் சொல்லப்போனால், வல்லரசு நாடுகளைக்கூட, well developed nations என்று சொல்லக்கூடிய வளர்ந்த நாடுகளைக்கூட உலுக்கிய உலகளாவிய இந்த நோய்த் தொற்றை எதிர்த்து இன்றைக்கு தமிழகத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மரியாதைக்குரிய அண்ணன் அவர்கள் களத்திலே நின்றதோடு, மருத்துவர்களுடைய ஆலோசனைகளையெல்லாம் பெற்று, இந்த கொரோனா நோய்த் தடுப்புப் பணிகளில், கண்காணிப்புப் பணிகளில், சிகிச்சைப் பணிகளில் ஒரு மகத்தான வெற்றியைப் பெற்று தமிழகத்தில் அந்த நோயைக் கட்டுக்குள்ளே வைத்திருக்கின்றார் என்பதை இந்தப் பேரவையில் நான் அழுத்தந்திருத்தமாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் கொரோனா வைரஸ் சீனாவில் கண்டறியப்பட்டவுடனே, மாண்புமிகு அம்மாவினுடைய அரசால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பொதுச் சுகாதாரச் சட்டத்தின்கீழ் தொற்று நோய் என்று 13–3–2020 அன்று அறிவித்ததோடு மட்டுமல்லாமல், நோய் வராமல் தடுப்பதற்குத் தேவையான வழிகாட்டுதல்களை கொள்ளை நோய்கள் சட்டம்,